Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நாசரேத் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரது நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர்: திருமதி. வி.சந்திர கலா

ந.க. எண். 372/2023 நாள். 26.07.2024

பொருள்: மனைப்பிரிவு – தூத்துக்குடி மாவட்டம் – நாசரேத் தேர்வு நிலை பேரூராட்சி – சர்வே எண். 84/4A2B1, 8, 87/3A, 15A, 15C இல் 8440 ச.மீ. (2.08 ஏக்கர்) பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கியது – இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடுதல்.

பார்வை:

1) துணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை, தூத்துக்குடி அவர்களின் தொழில்நுட்ப அனுமதி ந.க. எண். UJW73DQM/THOOTHUKUDI/2/2022/TCP, நாள். 12.06.2023.
2) திருமதி. ஹெலினா, திருமதி. அஜந்தா செல்வின், 34/26 சாமுவேல் ஐயர் தெரு, நாசரேத் என்பவரது மனு.
3) அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017.
4) அரசாணை எண். 18 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 04.02.2019.
5) அரசாணை எண். 16 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 31.01.2020.
6) அரசாணை எண். 141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 23.09.2020.
7) அரசாணை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 09.12.2020.
8) அரசாணை எண். 112 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 22.06.2017.
9) நாசரேத் தேர்வு நிலை பேரூராட்சி மன்ற தீர்மானம் எண். 378, நாள். 29.02.2024.
10) இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள். 12.10.2023.
11) நாசரேத் சார்பதிவாளர் அலுவலக ந.க. எண். 902/2023, நாள். 29.05.2023.
12) உதவிப் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், நாசரேத் அவர்களின் கடிதம் க.எண். உ.மி.பொ.வி/நாசரேத்/வ.உ./கோ.புகார்/ந.க. எண். 323/22, நாள். 16.12.2023.
13) சாத்தான்குளம் பேரூராட்சி தொகுப்பு இளநிலை பொறியாளரின் அறிக்கை நாள். 14.06.2024.
14) தொடர்புடைய ஆவணங்கள்.

****

ஆணை:

தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநர் (பொ) அவர்களின் பார்வை (1) இல் காணும் தொழில் நுட்ப அனுமதி கடிதத்தில், தூத்துக்குடி மாவட்டம், நாசரேத் தேர்வு நிலை பேரூராட்சி, நாசரேத் வருவாய் கிராமம் சர்வே எண். 84/4A2B1, 8, 87/3A, 15A, 15C இல் 8440 ச.மீ. (2.08 ஏக்கர்) பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்திட கோரி வரப்பெற்ற பார்வை (2) இல் காணும் மனுதாரர்களான திருமதி. ஹெலினா, திருமதி. அஜந்தா செல்வின் ஆகியோரது விண்ணப்பத்தின் தொடர்ச்சியாக நிபந்தனைகளுக்குட்பட்டு UJW73DQM/ THOOTHUKUDI/2/2022/TCP என எண்ணிடப்பட்டு 34 மனைகளுக்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர்களான திருமதி. ஹெலினா, திருமதி. அஜந்தா செல்வின் ஆகியோரது பார்வை (3) இல் காணும் தானப் பத்திரத்தின்படி, நாசரேத் சார்பதிவாளர் பத்திரப்பதிவு அலுவலக ஆவண எண். 902/2023, நாள். 29.05.2023 இன்படி பாதைக்கான இடத்தினை மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களது பெயரில் பதிவு செய்யப்பட்டு மனைப்பிரிவுதாரரால் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களது பார்வை (1) இல் காணும் கடிதத்தில், ஆய்வுக்கட்டணம், பூங்காவிற்கு மாற்றாக திறந்தவெளி ஒதுக்கீடு இடத்திற்கான (OSR Fess) தொகை, சென்டேஜ் கட்டணம் நகர் ஊரமைப்புத் துறையினரால் வசூலிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, நாசரேத் பேரூராட்சி மன்ற பார்வை (9) இல் காணும் தீர்மானத்தின்படி, நாசரேத் வருவாய் கிராமம் சர்வே எண். 84/4A2B1, 8, 87/3A, 15A, 15C இல் 8440 ச.மீ. (2.08 ஏக்கர்) பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவினை தூத்துக்குடி நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் (பொ) அவர்களால் வரன்முறைப்படுத்தி UJW73DQM/ THOOTHUKUDI/2/2022/TCP என எண்ணிடப்பட்டு 34 மனைகளுக்கு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கி வரப்பெற்றுள்ளதை மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கியுள்ளது.

பார்வை (4), (5) மற்றும் (7) இன்படி மனையிடத்தில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும், அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள். 04.05.2017 இன்படி நிலப்பயன் மாற்று கட்டணத் தொகையும் வசூல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதன்படி மனைப்பிரிவிற்கு பின்வரும் விவரப்படி தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	கட்டண விவரம்	தொகை
1.	கூர்ந்தாய்வுக் கட்டணம்	34000
2.	நிலப்பயன்பாட்டு கட்டணம் சந்தை மதிப்பில் 3% 8440X1905=16078200 (3%)	482346
3.	தெருவிளக்கு பிட்டிங்குகள் பராமரிப்பு கட்டணம்	50000
4.	OHT 10,000 Litre Tank Estimate Amount	420000
5.	வைப்புத் தொகை	100000

பார்வை (12) இல் காணும் தமிழ்நாடு மின்சார வாரிய உதவிப் பொறியாளர், நாசரேத் அவர்களின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை மற்றும் தெரு விளக்கு பிட்டிங்குகள் பராமரிப்பு கட்டணம் ஆகியவை பேரூராட்சி அலுவலக இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, நாசரேத் கிளை கணக்கில் மின்னணு பரிவர்த்தனை மூலம் வரவாக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில், நாசரேத் தேர்வு நிலை பேரூராட்சி, நாசரேத் வருவாய் கிராமம் சர்வே எண். 84/4A2B1, 8, 87/3A, 15A, 15C இல் 8440 ச.மீ. (2.08 ஏக்கர்) பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவு, தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் (பொ) அவர்களால் வரன்முறைப்படுத்தி UJW73DQM/ THOOTHUKUDI/2/2022/TCP என எண்ணிடப்பட்டு 34 மனைகளுக்கு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளதன்படி இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது. மேலும், மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து காலியிட வரி வசூலிக்கப்படும். மேலும் தணிக்கையின்போதோ அல்லது ஆய்வு அலுவலர் அறிக்கையின்போதோ இழப்பீடு ஏதும் குறிப்பிடப்பட்டால் அதை தாங்களே செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

செயல் அலுவலர் (பொ)
தேர்வு நிலை பேரூராட்சி
நாசரேத் – 628 617
தூத்துக்குடி மாவட்டம்

24/7/24

இணைப்பு:


மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

பெறுநர்:

திருமதி. ஹெலினா, திருமதி. அஜந்தா செல்வின்,
34/26, சாமுவேல் ஐயர் தெரு,
நாசரேத்.

நகல்:

1) திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2) தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் (பொ) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3) ஏரல் வட்டாட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4) சார்பதிவாளர், நாசரேத் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.



மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தூத்துக்குடி மாவட்டம்
நாசரேத் பேரூராட்சி

தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தூத்துக்குடி தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம், நாசரேத் பேரூராட்சி மற்றும் கிராமம், நில அளவை எண்: 84/4A2B1, 8, 87/3A, 15A மற்றும் 15C -ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள பதிவு எண்: UJW73DQM /THOOTHUKUDI/2022
அளவு : 1:600

வ

குறிப்பு

மனைப்பிரிவின் மொத்த பரப்பு	-	8440.00ச.மீ (2.08ஏக்கர்)
சாலை நீங்கலக மனைகளின் பரப்பு	-	5255.81ச.மீ
உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு	-	3184.19ச.மீ
கோரிய மனைகள்	-	37
ஒதுக்கிய மனைகள்	-	34
மனைப்பிரிவு இடத்தின் எல்கை	-	
நிலையில் உள்ள சாலை	-	

பொது ஒதுக்கீடுகள்:-

பூங்கா பரப்பளவிற்கான உடான அரசு வழிகாட்டி மதிப்பின் படி உரிய கட்டணத்தொகை மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. சாலை, உள்ளாட்சி, ஒதுக்கீடுகள் மற்றும் மூலை முடக்குகள் தான பத்திரம் மூலம் தானமாக உள்ளாட்சிக்கு மற்றும் (மின்வாரிய ஒதுக்கீடு மின்வாரியத்திற்கும்) தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

உத்தேச மனைப்பிரிவு சாலை		
உள்ளாட்சி ஒதுக்கீடு (PP-1)	-	31.15 ச.மீ (0.59%)
மின்வாரிய ஒதுக்கீடு (PP-2)	-	34.10 ச.மீ (0.64%)

மூலை முடக்கு -

7.20மீ - 12.00மீ அகல சாலை வரை 1.50மீ x 1.50மீ

நிபந்தனைகள்:

1) அரசாணை எண்:16(ம)18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை 04.02.2019(ம)30.01.2020-ல் பரிசீலிக்கப்பட்டதில் அரசாணை வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சி (ம4(1))துறை-ன் அரசாணை எண்-181, நாள் 09.12.2020 படி ஒத்திசைவிற்கு மனைப்பிரிவிற்கான சாலை, பூங்கா (ம) உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு பகுதிகளை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கபடவில்லை என்றும் நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3) நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

4) இவ்வலுவலக இணையதள பதிவு எண். UJW73DQM/2022 தூமாஅ- ல், கண்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும்.

SWP/DTCP/THOOTHUKUDI/LAYOUT NO:37/2023

Digitally signed by: Assistant Director
Location: Thoothukudi
Date: 2023.06.12 16:04:09

Document Classifier by Reverie Ravindra

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தூத்துக்குடி-2



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate